## 14. உம்மை போல தேவன் இல்லவே

### பல்லவி

உம்மை போல தேவன் இல்லவே இல்ல
பூமியிலே எங்கும் நான் காணவே இல்ல

### அனுபல்லவி

*நீர் பெரியவர் உயர்ந்தவர் ஒப்பற்ற தேவனே*
*நீர் பரிசுத்தர் பரிகாரி பரலோக தேவனே*

### சரணங்கள்

1. குருடருக்கு பார்வை தந்தார்
   செவிடரையே கேட்க செய்தார்
   முடவரையே நடக்க வைத்தார்
   மரித்தோரை எழுப்பி விட்டார்

   அல்லேலூயா அல்லேலூயா
   அல்லேலூயா – 2

2. பிசாசின் கிரியைகளை
   அழிக்க வெளிப்பட்டவர்
   பாவ சாபங்களை நம்மை விட்டு
   நீக்கி விடுவித்தவர்

   - அல்லேலூயா

3. குஷ்ட ரோகிகளை
   கூசாமல் தொட்டவர்
   கஷ்டப்படுகிற யாவரையும்
   கரம் நீட்டி அனைத்தவர்

   -அல்லேலூயா